DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மஞ்சுளா | Father/Husband Name : ஜெயராஜ் |
| Age : 24 | Village : துலுக்கப்பட்டி |
| Taluk : | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6 Aug 2026 15:00
(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் துலுக்கப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவரை வழக்கு சம்பவத்தின்போது பார்த்தேன். நான் தற்போது வீட்டில் இருக்கிறேன், வேலைக்கு செல்லவில்லை. வழக்கு சம்பவம் நடைபெறும்போது நான் சாத்தூரில் உள்ள இலட்சுமி பல் மருத்துவமனையில் வேலை செய்து வந்தேன். மேற்படி மருத்துவமனை சாத்தூர் படந்தால் சாலையில் அமைந்துள்ளது. என்னுடைய கணவர் கொத்தனார் வேலை செய்து வந்தார். அந்த சமயத்தில் நாங்கள் சாத்தூர் அமீர்பாளையத்தில் குடியிருந்து வந்தோம்.

2. 06.08.2023ம் தேதி ஞாயிற்று கிழமை என்பதால் அன்றையதினம் என்னடைய கணவர் வேலைக்கு செல்லவில்லை. ஆகையால் மதியம் என்னை கூப்பிடுவதற்காக கூறினார். நான் என்னுடைய கணவர் வருவார் என்று மதியம் சுமார் 02.15 மணி வரை பார்த்தேன், ஆனால் அவர் வரவில்லை என்பதால் சாத்தூர் பேருந்துநிலையத்திற்கு நடந்து சென்றேன். நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, என்னுடைய கணவர் எனக்கு எதிர் திசையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி அவருடைய ஹீரோ இருசக்கர வாகனத்தில் வந்து சாலையின் இடது ஓரத்தில் நின்று கொண்டிருந்தார்.

3. அப்பொழுது அவருக்கு பின்னால் வந்த TN 72 N 2286 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்து ஹாரன் அடிக்காமலும், கவனக்குறைவாகவும் வந்து என்னுடைய கணவரின் இருசக்கர வாகனத்தின் மீது பக்கவாட்டில் உரசிவிட்டது. அதில் என்னுடைய கணவர் சரிந்து பேருந்தின் முன்பக்க இடது பக்க சக்கரத்தில் விழுந்துவிட்டார். அதில் என்னுடைய கணவரின் தலை மீது பேருந்தின் சக்கரம் ஏறி இறங்கி, என்னுடைய கணவரின் மூளை வெளியே வந்து அங்கேயே இறந்து விட்டார். மேற்படி அரசு பேருந்தை ஆஜர் எதிரி ஓட்டி வந்தார். என்னுடைய கணவர் ஓட்டி வந்த TN .......0951 என்ற இருசக்கர வாகனத்தின் முன் வலது பக்கத்தில் சிராய்ப்பு சேதாரம் இருந்தது.

4. அங்கிருந்து தனியார் அவசர ஊர்தி வாகனத்தில் என்னுடைய கணவரின் உடலை சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அந்த சம்பவம் தொடர்பாக நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.
6 Aug 2026 15:11

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : பாண்டியராஜன் | Father/Husband Name : கந்தசாமி |
| Age : 27 | Village : அமீர்பாளையம் |
| Taluk : | Calling : கோழிப்பண்ணை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6 Aug 2026 15:13

(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் அமீர்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கோழிப்பண்ணையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1- மஞ்சுளாவை எனக்கு தெரியும். இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன ஜெயராஜ் என்பவரையும் எனக்கு தெரியும். அவருக்கும் எங்கள் ஊர்தான்.

2. நானும் என்னுடைய அண்ணன் (ப.சா.3) செல்லப்பாண்டியும் சாத்தூர் படந்தால் சாலையில் உள்ள மீனாட்சி பேர் ஹவுஸ் கடையில் டியூப் லைட் வாங்கிவிட்டு அந்த கடையின் வாசலில் வந்து நின்றபோது, அரசு பேருந்து ஒன்று அந்த வழியாக கிழக்கிலிருந்து மேற்குநோக்கி வந்தது. அந்த வாகனத்தின் பதிவு எண் மற்றும் அது எந்த ஊருக்கு செல்லக்கூடியது என்பது எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அப்பொழுது பேருந்துக்கு இடது பக்கத்தில் ஜெயராஜ் அவருடைய ஹீரோ ஸ்பிளெண்டர் இருசக்கர வாகனத்தில் வந்தார். அவரும் அந்த பேருந்தும் படந்தால் சாலையில் திரும்பிய பிறகு ராஜ் ஸ்டுடியோ முன்பு அந்த பேருந்து ஜெயராஜ் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் உரசிவிட்டது. அதில் ஜெயராஜ் நிலைதடுமாறி பேருந்தின் முன் இடது பக்க சக்கரத்திற்குள் விழுந்துவிட்டார். அந்த சக்கரம் ஜெயராஜின் தலையில் ஏறி இறங்கிவிட்டது.

3. அதற்கு எதிர்திசையில் ஜெயராஜின் மனைவி மஞ்சுளா மருத்துவமனையிலிருந்து நடந்து வந்துகொண்டிருந்தார். அவர் சம்பவத்தை பார்த்ததும் பதட்டமாகிவிட்டார். சம்பவ இடத்திலேயே ஜெயராஜ் இறந்துவிட்டார். நாங்கள் தனியார் அவசர ஊர்தி வாகனத்திற்கு போன் செய்து ஜெயராஜின் உடலை சாத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். பேருந்து வேகமாக வந்து திரும்பி ஜெயராஜ் மீது உரசியதால் தான் விபத்து ஏற்பட்டது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

6 Aug 2026 15:21

(Sd/-Thiru.S.Varatharajan)
Judicial Magistrate 2, Sattur.

// True Copy // P.P